SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள்
அமுதப் பெருவிழா

<u>சுருக்கம்</u>

கூட்டுறவுத்துறை - அறிவிப்புகள் - 2021-2022- கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு - நகர கூட்டுறவு வங்கிகளில் முதல்முறையாக 10 தானியங்கி பணப் பட்டுவாடா இயந்திரங்களை (ATM) ரூ.50 இலட்சம் செலவில் வங்கியின் சொந்த நிதியின் மூலம் நிறுவுதல் – கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு அனுமதி – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிப்பி2) துறை</u>

அரசாணை (நிலை) எண். 103

நாள்: 18.11.2021
ஸ்ரீ பிலவ வருடம் , கார்த்திகை 02
திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டது.

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கடித எண் 49758/2021/ நவ1, நாள் 27.09.2021.

-------

<u>ஆணை:-</u>

2021-2022-ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் "**நகர கூட்டுறவு வங்கிகளில் முதல்முறையாக 10 தானியங்கி பணப் பட்டுவாடா இயந்திரங்களை (ATM) நிறுவுதல்.**" என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.தமிழ்நாட்டில் உள்ள 108 நகர கூட்டுறவு வங்கிகள் எதிலும் தானியங்கி பணப்பட்டுவாடா செய்யும் இயந்திரம் (ATM) வசதி இல்லையாதலால், நடப்பாண்டில், முதற்கட்டமாக 10 தானியங்கி பணப்பட்டுவாடா செய்யும் இயந்திரங்கள் (ATM) நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளில் நிறுவப்படும் எனவும், இதற்கென ஆகும் செலவு ரூ.50.00 இலட்சம் அந்தந்த வங்கிகளால் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், நகர கூட்டுறவு வங்கிகளில் தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரம் (ATM) நிறுவுவதன் மூலம், வங்கி சேவை நேரத்தில்

மட்டுமல்லாது வங்கி விடுமுறை நாட்களிலும் 24 மணி நேர சேவையை அளிக்க முடியும் எனவும் இதனால் வங்கியின் வாடிக்கையாளர்கள் வணிக வங்கிக்கு இணையதள வங்கி சேவையை பெற முடியும் எனவும் இச்சேவை புதிய வாடிக்கையாளர்களையும் ஈர்க்க கூடியதாக அமையும் எனவும் தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் (ATM) நிறுவுவதால் வங்கிக்கு அதிக வாடிக்கையாளர்கள் கிடைப்பதுடன் வங்கியின் வருவாய் அதிகரிக்க வழிவகுக்கும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இவ்வறிவிப்பினை செயல்படுத்த தேவைப்படும் உத்தேச தொகை ரூ.50.00 இலட்சத்தை கீழ்க்கண்ட நகர கூட்டுறவு வங்கிகளின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | மாவட்டம் | நிறுவ உள்ள நகர கூட்டுறவு வங்கியின் பெயர் | நிதி ஆதாரம் (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | | | உத்தேச தொகை | நிதி வகை |
| 1. | ஈரோடு | கோபிச் செட்டிப் பாளையம் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 2. | சென்னை | ஜார்ஜ் டவுன் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 3. | காஞ்சிபுரம் | பெரிய காஞ்சிபுரம் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 4. | காஞ்சிபுரம் | சின்ன காஞ்சிபுரம் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 5. | விருதுநகர் | பூபதி ராஜீ – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 6. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 7. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 8. | விழுப்புரம் | விழுப்புரம் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 9. | திருப்பூர் | திருப்பூர் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 10. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் நிக்கல்சன் - தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |

3. எனவே, மேற்காணும் நகர கூட்டுறவு வங்கிகளில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரம் (ATM) ரூ50.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவ

அரசு ஆணை பெற்று வழங்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, 2021-2022 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரின் அறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு, கீழ்கண்ட நகர கூட்டுறவு வங்கிகளில் தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் (ATM) அமைக்க அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | மாவட்டம் | நிறுவ உள்ள நகர கூட்டுறவு வங்கியின் பெயர் | நிதி ஆதாரம் (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | | | உத்தேச தொகை | நிதி வகை |
| 1. | ஈரோடு | கோபிச் செட்டிப் பாளையம் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 2. | சென்னை | ஜார்ஜ் டவுன் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 3. | காஞ்சிபுரம் | பெரிய காஞ்சிபுரம் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 4. | காஞ்சிபுரம் | சின்ன காஞ்சிபுரம் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 5. | விருதுநகர் | பூபதி ராஜீ – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 6. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 7. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 8. | விழுப்புரம் | விழுப்புரம் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 9. | திருப்பூர் | திருப்பூர் – தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |
| 10. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் நிக்கல்சன் - தலைமையகம் | 5.00 | சொந்த நிதி |

மேலும், மேற்கண்ட 10 நகர கூட்டுறவு வங்கிகளில் தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள் (ATM) ரூ.50.00 இலட்சம் செலவில் வங்கியின் சொந்த நிதியின் மூலம்

நிறுவ கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு அனுமதி வழங்கி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை – 10.

நகல்:-
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு)த் துறை, சென்னை-9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஜி1)த் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/11/21
பிரிவு அலுவலர்